# பொது முன்னுரை

இயேசுவின் சிலுவைப் பாதை இது ஒரு போராட்டப்பாதை. இது சமூக மாற்றத்திற்கான புதிய பாதை - இது என்றோ எங்கோ நடந்து முடிந்த பாதையல்ல. நம்மவரில் நாளும் நடக்கும் பாதை. இயேசு நம்மை வெறும் பார்வையாளராய் மட்டும் இருந்திட அழைக்கவில்லை. சிலுவையை ஏற்றுக்கொண்டு என்னைப் பின்பற்றாதவன் எனக்கு ஏற்றவனல்லன் என்று கூறுகிறார் இயேசு. இயேவின் சாயலில் வாழும் மனிதர்களின் வாழ்வில் இன்றும் சிலுவைப்பாடுகள் தொடர்கின்றன. அப்பாடுகளை இயேசுவின் பாடுகளோடு இணைந்து சந்திக்கவும் - சிந்திக்கவும் வேண்டிய மனமாற்றம் பெற்றிட வரம்வேண்டி இயேசுவின் திருப்பாடுகளில் நம் தடம் பதித்து பக்தியோடு இச்சிலுவைப்பாதையில் பங்குபெறுவோம்.

## நிலை 1

வெளி வேடமாகப் பேசுகிறவர்களை விட்டுவிடுகிறீர்கள். வெளிப்படையாக பேசிய என்மேல் விசாரணை வைக்கிறீர்கள். விவரம் தெரிந்து கொள்ளவா! விசாரணை நடத்துகிறீர்கள். என்னை வேதனைப்படுத்தவே தோழரே! கட்டுகளை அவிழ்த்துப்போக விடுங்கள் என்றேன். கட்டுகளை அவிழ்க்க வந்த என் கரங்களையே கட்டிவிட்டீர்கள். வேண்டாம் உங்கள் வெளிவேட விசாரணைகள். என்னுடைய ஆதங்கமெல்லாம் உங்கள் அநியாயத் தீர்ப்பு என்னோடு முடிந்து விடட்டும் என்பதே. உங்களது மூர்க்க தனமான பேச்சுக்களால் எத்தனை மொட்டுக்கள் சருகாயிருக்கின்றன. தவறான உங்களது வார்த்தைகளால் எத்தனை தற்கொலைகள் அரங்கேறியிருக்கின்றன. தீய சொற்களால் எத்தனை உள்ளங்கள் தீய்ந்து போயிருக்கின்றன. போதும் சகோதரமே. போதும் உங்கள் வார்த்தைகள் வாழ்வைக் கெடுப்பதற்கல்ல வாழ்க்கை கொடுப்பதற்கு. இனிமையான பேச்சுகள் இதயங்களை எழுப்பட்டும் கனிவான வார்த்தைகள் கலங்கிய உள்ளங்களை தேற்றட்டும்.

## நிலை 2

சாதனை செய்தவர்களுக்கு சரித்திரத்தில் இடம் உண்டு. சன்மானமாகச் சில பரிசுகளும் கிடைப்பதுண்டு. ஆனால் எனக்கோ வேதனையைப் பரிசாகத் தந்து வேடிக்கை பார்க்கிறீர்கள். வேறென்ன செய்ய முடியும் உங்களால் சுமை சுமந்து சோர்ந்திருப்போரே சுமைகளைத் தாருங்கள் என்றேன். என்னையே சுமையென நினைத்துச் சுமத்தினீர்கள் என் மீது சிலுவையை. என் சிந்தை கலங்குகிறேன். இனி மேலும் யார் மீதும் சிலுவையை ஏற்றாதீர்கள் வறுமைக்கொடுமையால் வேலையில்லாத் திண்டாட்டத்தால் வரதட்சணை அவதியால் துன்ப துயரத்தால் ஏழை மீது ஏற்றப்பட்டிருக்கும் இரக்க மற்ற சிலுவைகளை இறக்கி வைக்க பாடுபடுங்கள்.

## நிலை 3

ஏன் விழுந்து விட்டேனென்று எண்ணுகிறாயா? விழவில்லை நான். விழுத்தாட்டப் பட்டிருக்கிறேன். என் கால்கள் இடறுவதை நினைத்து நான்

கலங்கவில்லை. உன் வார்த்தையில் அடிக்கடி வழுக்கி விழுகிறாயே அதற்குத்தான் வருத்தப்படுகிறேன். வீழ்த்தப்படுவோரெல்லாம் வீழ்ந்து கிடப்பதில்லை. காலம் ஒரு நாள் மாறும் வீழ்ந்தவர்களெல்லாம் எழுந்து விட்டால் வீழ்தியவர்கள் இங்கு வீழ்த்தப்படுவார்கள். அடக்கு முறை ஒரு பக்கம் ஆதிக்க வெறி மறு பக்கம் இவைகளுக்கு மத்தியில் நீ சாதிக்கப்பிறந்தவன் முன்னோர்களைப் பார். முட்டி மோதித்தான் முன்னேற்றம் கண்டார்கள். நீ மனது வைத்து விட்டால் காலம் உன்னை உயர்தி வாழ்த்தி நிற்கும்.

நிலை 4
ஈன்ற தாய் எவருக்கும் ஏற்படக்கூடாத சோகம் எனக்கு வந்துள்ளது. தோளிலே சிலுவை தலையிலே முள்முடி கிழிக்கப்பட்ட தேகம். அழிக்கப்பட்ட கோலம். பிழையென்ன செய்தான் என் மகன் தொழு நோயைக் கூட தொட்டு தூய்மையாக்கியவனை அழ வைத்து அசிங்கப்படுத்தி குற்றுயிராய் விட்டார்களே. பெற்றோர்களே உண்மைக்கு உரமாகும் உங்கள் பிள்ளைகளை ஊரார் வதைத்தாலும் உதாசீனப்படுத்தி விடாதீர்கள். உதாசீனப்படுத்திவிட்டால் உடைந்து போவார்கள். நீங்களே அவர்களை மறுதலிப்பதால் தான் மதுக் கோப்பைகளில் அவர்கள் மனதைப்பதிக்கிறார்கள். விமர்சனத்தால் அவர்கள் விரக்தி அடைந்த போதும் பெற்றோர்களே என்னைப் போல் நீங்கள் உங்கள் பிள்ளைகளைத் தேற்றினீர்களென்றால் இனி வருபவர்கள் என் மகன்களாகத் தான் இருப்பார்கள். வருங்கால வழிகாட்டிகளை இப்போதே தேற்றுங்கள் வருகின்ற காலம் வளமானதாகட்டும்.

நிலை 5

மானிடம் அழிக்கப்படுவதை மறந்து விட்டாய் நீ, என் பயணம் பாதியில் முடிந்து விடுமோ எனப்பயப்படுகிறார்கள் என் சிலுவையைச் சுமக்க வழியில் வந்தவனுக்கு வாய்ப்புக் கொடுக்கிறார்கள், யார் அந்த சீமோன்? பிறரின் சுமையை சுமந்ததால் பெரியோனாகக் கருதப்பட்டான். பிறர் சுமையைச் சுமப்பவர்களே பெரியோர்களானால் பிறருக்குச் சுமையாய் இருப்பவர்கள். சிறியோர்களே. அப்படியானால் நம்மில் எத்தனை பெரியோர்கள் நடமாடுகிறார்கள். கடவுள் மனிதனுக்கு உதவும் காலம் போய் இதோ மனிதன் கடவுளுக்கு உதவுகிறான். மனிதன் மனிதனுக்கு உதவும் காலம் தொடரட்டும். இதுதான் வாழ்க்கை கோட்பாடு சுமைகளை சுமக்கும் சோக உள்ளங்களுக்கு நம் தோள்கள் துணையிருக்க துணிவோடு நடைபோடுவோம்.

நிலை 6

கனத்த சிலுவையோடு கலங்கிய கண்களோடு கனிந்த இதயம் கொண்டவர். கால் தடுமாற பயணத்தை தொடரும் போது கன்னி ஒருத்தி கைம்மாறு கருதாது தன் கரம் கறைபட்டுள்ளதோ என்ற கலக்கத்தோடு கறை படிந்த திருமுகத்தைத் துடைக்கிறாளே. ஈராயிரமாண்டுகளுக்கு முன் எப்படி வந்தது இந்த துணிவு? வெரோணிக்காள் என்ற வீரமங்கைக்கு நெஞ்சில் இரக்கம் இறங்கியதால் ஈரமங்கை வீரத்தோடு துயர்துடைக்க முன்வருகின்றாள். அன்பு

மகளே! பழிக்குற்றங்கள் எவர் வாயிலிருந்து புறப்பட்டாலும் உன் சிந்தைக்குப் புறம் பாகட்டும் விமர்சனங்களுக்கு பயந்து வீட்டுக்குள் பதுங்காதே. சம்பிரதாயத்திற்கு பயந்து சரித்திரத்திலிருந்து ஒதுங்காதே. இனியும் நீ மாளப் பிறந்தவள் அல்ல. உலகை ஆளப்பிறந்தவள் என்பதை மறவாதே.

நிலை 7

சென்று சேர வேண்டிய இடம் இன்னும் வரவில்லை அதற்குள் இன்னொரு முறை மின்னல் வேகத்தில் மண்ணில் விழுந்தேன். என்முகம் தரையில் படிந்தாலும் பார்வை ஏனோ என் பக்கமே இருக்கிறது. இரக்கமற்றவர்கள் என்னை குத்தி கிளறுகிறார்கள். இலட்சியவாதிகள் அழிந்தாலும் இலட்சியங்கள் அழிவதில்லை. வீழ்வது நானாக இருந்தாலும் வாழ்வது நீயாக இருக்கட்டும் என்று மௌனமாய் இருக்கிறேன். சிந்தித்துப்பார். சிந்தித்தவர்கள் தான் சீர்திருத்தவாதிகள் போராட்டத்தில் சந்தித்தவர்கள் தான் சரித்திரத்தில் இருக்கின்றார்கள். இன்னும் ஏன் தயக்கம்? விழுப்புண் இல்லாத வெற்றியுமில்லை பத்தோடு பதினொன்றாய் நீயும் இருந்துவிடாதே. பத்தில் ஒன்றாய் இரு பகலவன்போல் ஒளி வீசு விழுந்தால் விதையாக எழு! என்கரத்தைப் பற்றிக்கொள்

நிலை 8

உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள் என்கிறார். அர்த்தம்தான் என்ன? எனது வாழ்க்கையை பாடமாக எடுத்து கொள்ளுங்கள் தான் காயப்பட்டாலும் எதிர்கால சந்ததி தனது வாழ்க்கையை சீர் தூக்கி உத்தமர்களாக வாழட்டும் என பெண்களுக்கு அவர்களது குடும்ப நிலையை உணரச் செய்கிறார். இன்று குடிவெறியால் குடும்பத்தை குலைக்கும் கணவருக்காக அழுங்கள். வாழவரும் பெண்களை பேரம் பேசும் மாமியார்களுக்காக அழுங்கள். வசதியில்லை என்ற காரணதத்திற்காக வாசற்படியை மிதிக்க அனுமதிக்கா வெளிவேடக்காரர்களுக்காக அழுங்கள். செய்வதை சொல்வோம் - சொல்வதை செய்வோம் என்று ஏமாற்றும் ஊர்சுற்றி தலைவர்களுக்காக அழுங்கள். முதுமை என்ற காரணத்திற்காக முதியவர்களை அனாதை இல்லங்களுக்கு அனுப்பும் இதயமற்ற குடும்பத்தினர்க்காக அழுங்கள்.

நிலை 9

பட்ட இடத்திலே படும் கெட்ட குடியே கெடும் என்பார்கள். இயேசுவும் முழுமை நிலையை அடைய மூன்று முறை கீழே விழுகிறார் இயேசு எத்தனை முறை விழுந்தார் என்பது முக்கியமல்ல எதற்காக விழுந்தார் என்பது தான் முக்கியம். வாழ்க்கையில் ஒரு முறை விழுந்தவர்கள் எல்லாம் நிலை தடுமாறி முடிவை தேடி கொள்கிறார்கள். இறைமகன் மூன்று முறை விழுகிறார். ஆனால் முறைப்படி எழுகிறார். நிமிர்ந்து பயணத்தை தொடர்கிறார் ஆனால் நம் வாழ்க்கையில் தடுமாற்றங்கள் ஏமாற்றங்கள் அநேக முறை வருகின்றன. ஆசையில் விழுகின்றோம். கோபத்தில்

விழுகின்றோம். பகையில் விழுகின்றோம். பிடிவாதத்தில் விழுகின்றோம். நமது நிலையை சீர்தூக்கிப் பார்த்து பழையன கழிந்து புதிய உலகம் படைத்திட புத்துயிர்பெற்று இயேசுவுடன் எழுவோம். பயணம் தொடர்வோம்.

நிலை 10

, ஆள் பாதி ஆடை பாதி' என்பார்கள். என்னை ஒரு ஆளாக கருதாமல் என் உடை முழுவதையும் அபகரித்து கொண்டார்கள். அழுக்கு படியாத ஆடைகளுக்கு அர்ச்சனை செய்பவர்களே ஆண்டவன் பார்ப்பது ஆடையை அல்ல அகத்தினை. என் துகில் உரிப்பவர்களே! சாதி என்ற பெயரில் சமுத்துவத்திற்கு சமாதி எழுப்புவதை உரித்து போடுங்கள். பெண்மையை வதைக்கும் வக்கிரத்தை உரித்துப்போடுங்கள். மதம் என்ற பெயரில் மனிதத்தை மாய்க்கும் மடத்தனத்தை உரித்து போடுங்கள். துணியை மட்டுமல்ல. என் உடலையும் கொடுத்து விட்டேன். எனக்கு செய்தது போதும், இனி வரும் தலை முறைக்கு இப்படி செய்யாதீர்கள் எல்லோரையும் வாழ வையுங்கள். இல்லையேல் வழி விடுங்கள்.

நிலை 11

நேற்று வரை போதகரே என்று வாழ்த்தி வீசியவர்கள், இன்று பொங்கி எழும் ஆழிப்பேரலைபோல சிலுவையில் அறையும், சிலுவையில் அறையும் என உரக்க கத்துகிறார்கள். விளைவு, யேசுவின் புனித யாத்திரைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படுகிறது. கன்னியின் வயிற்றில் கருவானவர் இங்கே சிலுவையில் சிதைக்கப்படுகின்றார். அவமானத்தின் சின்னமாகிய சிலுவை இங்கே அர்ச்சிக்கப்படுகிறது. மரணத்தின் சின்னம் இங்கே மகிமையடைகிறது. நம் சகோதர சகோதரிகளை எத்தனை முறை சுயநலத்தால் ஆணிகளால் அறைந்திருக்கிறோம். இரும்பு ஆணிகளை விட நாம் கொடியவர்களாய் சில சமயங்களில் வாழ்ந்திருக்கிறோம். தடியால் அடிப்பதை விட தடித்த சொற்களால் அடிப்பது அதிக வலியை தரும். வாளால் வெட்டபடுவதைவிட வார்த்தைகளால் வெட்டபடுவது அதிக வேதனையை தரும் - சிந்திப்போம்.

நிலை 12

மனித நேய மணிகாட்டியின் உயிர், மலைஉச்சியில் நம் ஜென்ம பாவத்தால் அந்த அழகு முகம் சிவப்பானதே! பசிக்கு உணவானீர். நோய்க்கு மருந்தானீர். கடவுளுக்கு அன்பானீர். இறுதியில் மனிதனை மீட்க உம் இரத்தமுமா தேவைப்பட்டது? நீர் ஒரு புனித பிறவி. எங்களுக்காக வாழ்ந்த துறவி. ஆம்! சிலுவையில் நீர் அடைந்த வேதனையில் உம்முடைய பாசம் புரிகிறது. உம் மீட்பு தெரிகிறது. கடவுளின் திட்டம் நிறைவேறுகிறது. உம் புரட்சிக்கனவால் இலட்சிய வேகத்தால் விளைந்தது உம்சாவு. உம் சாவு பூமியில் நடவாமல் அந்தரத்தில் நடந்ததை எண்ணி சிந்தை அழுகிறேன். கண்ணீா வடிக்கிறேன். எனக்காக நீர் சிலுவையில் தொங்க நான் என்ன தவம் செய்தேன்?

நிலை 13

சிதைக்கப்பட்ட ஓவியமாய் - உரித்து போட்ட நாராய் - உலர்ந்து போன மைந்தனை மடியில் கிடத்தியவராய் - கண்ணீர் முத்துக்களை சொரிந்தவராக மடியில் சுமக்கிறார் அன்னை மரியா. ஆசீர்வதிக்கபட்டவர் அவல நிலை காண்கிறார். இயேசுவின் வார்த்தைகளை இதயத்தில் சுமந்தவர் இன்று அவரது உடலை மடியில் சுமக்கிறார் அன்னை மரியா. பத்து மாதம் கருவில் சுமந்தவர் பட்டு போன மகனை மடியில் சுமக்கிறார். இறை அழைப்பை ஏற்ற போது ஒரு மனப்போராட்டம். இறை யேசுவைப்பெற்ற போது ஒரு சுகப்போராட்டம் - அவர் வளர்ந்த போது உறவு போராட்டம் - இப்போது கல்வாரியில் கண்ணீர் போராட்டம். ஏன் இந்த போராட்டம்? எல்லோரும் மீட்பு பெறவேண்டும் என்பதற்காக தன்னையே நமக்காக அர்ப்பணமாக்கிறார்.

நிலை 14

ஒரு சமாதானப்புறா இங்கு சமாதியில். ஒரு தெய்வீக ராகம் முகாரியில். விண்ணுக்கும் மண்ணுக்கும் இருந்த வேறுபாடு களைவதற்கு இந்த மண்ணுக்கு வந்த மானிட மகனை மண்ணுக்குள்ளே வைக்கிறது கயவர் கூட்டம். மண்ணை தோண்டியல்லவா தங்கத்தை எடுப்பார்கள். இங்கு மண்ணை தோண்டி தங்கத்தையை புதைக்கிறார்கள். அன்பை விதைத்தவருக்கு அருளை கொடுத்தவருக்கு வாழ்வை கொடுத்தவர்க்கு வாழ்வாக மாறிவருக்கு ஏன் இந்த கொடூரம்? உயிர்ப்பும் உயிரும் நானே என்ற உண்மையை எடுத்துரைத்த இறைமகன் இயேசு இருட்டறையில் - கல்லறையில் புதைக்கப்படுகிறார். நாம் ஒவ்வொரு நாளும் உண்மைகளையும், உறவுகளையும் புதைக்கின்றோமா? அல்லது விதைக்கின்றோமா? பிறரின் உரிமைகளையும் உணர்வுகளையும் மதிக்கின்றோமா? அல்லது புதைக்கின்றோமா? எதை நாம் புதைக்கின்றோம்? எதை நாம் விதைக்கின்றோம்? சிந்திப்போம். மறுக்கப்படுகின்றபோது இயேசு மீண்டும் கல்லறையில் புதைக்கப்படுகின்றார்.